DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : C**C 284/2024** |
| Deposition of Witness for | : PW 5 |
| Name | : சௌந்திரராஜன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 19.05.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19th **May** 2026.

**எதிரி வீடியோ கான்பரன்சிங் மூலம் ஆஜர் செய்யப்பட்டார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது பெரியகோவிலான்குளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் வீடியோ கான்பரன்சிங்கின் மூலம் ஆஜர் படுத்தப்பட்ட எதிரியை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான்.என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். 2018ம் வருடம் காலை சுமார் 7.30 மணியளவில் சங்கரன்கோவில் இரயில்வே பீடர் ரோடு சிக்னல் அருகே வைத்து போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். நான்

அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் போட்டேன். நான் கையொப்பம் செய்து கொடுத்ததில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்ச்சியில் உள்ள 2வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என் முன்புக்கு எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

<u>**நீதிமன்ற விசாரணை**</u>

கடந்த 10.11.2018ம் தேதிகாலை 9.45 மணியளவில் நானும், என் ஊரை சேர்ந்த வைரமுத்து என்பவரும் சங்கரன்கோவில் ரயில்வேபீடர் சந்திப்பு அருகே நின்றபோது அங்கு வந்த எதிரி தேவநேசன் என்ற தேவாவை போலீசார் எங்கள் முன்னிலையில் கைது செய்தார்கள் என்றும், அப்போது எதிரி தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்தஒப்புதல்வாக்குமூலத்தில் சங்கரன்கோவிலில் ஒரு வீட்டில் இருந்த பைக்கை திருடியதாக தெரிவித்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதரியிடமிருந்து ஒரு பைக்கை போலீசார் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நாங்கள் கையொப்பம் செய்தோம் என்றும், போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**